DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 77/2021 |
| Deposition of witness | : | PW- 8 |
| Name | : | நன்மாறன் |
| Father's /Husband Name | : | கருணாநிதி |
| Village | : | மருதுவாஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 30 |
| Occupation | : | எலக்ட்ரிசியன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day June 2024.
Both accused present.

**முதல் விசாரணை**:-

நான் மருதுவாஞ்சேரியில் குடியிருந்து எலக்ட்ரிசியன் ஆக வேலைப்பார்த்து வருகிறேன். 6.09.2020 ம் தேதி பகல் 1.00 மணிக்கு நானும் குமார் என்பவரும் வசந்தா மற்றும் எதிரிகளுக்கிடையே சண்டை நடந்த இடத்திலிருந்தபோது பேரளம் போலிசார் வந்து பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். நானும் குமார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

அ.சா.1 வசந்தா வசிக்கும் தெருவில் நானும் வசிக்கிறேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்திலிருந்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எழுதிய ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். கையால் எழுதப்பட்டதா என்றால் இல்லை தட்டச்சு செய்யப்பட்டது. அதை எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார்கள். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.